அல்லது எதிர்காலத்திலாவது அதைப் பரிசீலிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊட்டி நகருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற, இதுவரையிலே நான் விவரித்திருக்கின்ற இந்தத் திட்டமே அந்த நகராட்சிக்குப் போதுமானதாகக் கருதப்பட்டு, வருங்காலத்திலும் அதே அளவு கொள் அளவு கொண்டிருக்கின்ற அந்த நீர்த்தேக்கத் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, ஆகியவை அனைத்துமே அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய - அந்த மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே எதிர்காலத்திற்கென்று மாற்றுத் திட்டம் தேவை இருக்காது என்று அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 317, திரு. எஸ். ஆசைமணி, இருக்கையில் இல்லை. திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

317-

குடவாசல் தாலுக்காவில், வெள்ளை அதம்பார் கிராமத்தில் குடியிருப்பு மனைப்பட்டா வழங்குதல்.

***21867*—திரு. எஸ். ஆசைமணி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுகா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் மக்களுக்கு குடியிருப்பு மனைப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுக்கா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் மக்களுக்கு மேற்படி கிராம புல எண் 43, 44-ல் பட்டா வழங்க நன்னிலம் ஆதிதிராவிடர் நல தனி வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11.00

1994 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கு. சீனிவாசன்.

திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டம், குடவாசல் தாலுகா, வெள்ளை அதம்பார் கிராமம், ஆற்றங்கரைத் தெருவில் வசிக்கும் குடிமக்கள், கிட்டத்தட்ட 60 ஆண்டுக் காலமாகக் குடியிருந்தும், பல்லாண்டுக் காலமாக குடியிருப்பு மனைப் பட்டா வழங்கக் கோரிக்கை வைத்தும், அது நிறைவேற்றப்படாமல் இருக்கிற காரணத்தினால்—அமைச்சர் அவர்கள் அது ஆய்வில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். இந்த ஆண்டிலேயே அது பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி கிராமத்தில் திரு. சடையன் மற்றும் 24 நபர்கள் கூரை வீடுகள் கட்டி, சுமார் 15 ஆண்டுகளாக குடும்பத்தாருடன் வசித்து வருவதாகவும், ஆற்றங்கரை புறம்போக்கு என்பது, ஆட்சேபணைக்குரிய புறம்போக்கு என்பதால், பட்டா வழங்க இயலாது என்றும், மேலும் மேற்படி கிராமப் புல எண் 43 மற்றும் 44-இல், அந்த நபர்களுக்கு மனைப் பட்டா வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும், மிக விரைவில் அந்த மனைப் பட்டாக்கள் வழங்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம்—காயிதே மில்லத் மாவட்டத்தில் இதுவரையில், ஆதிதிராவிடர்களுக்கு எவ்வளவு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன? எவ்வளவு மனுக்கள் வரப்பெற்றுள்ளன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தம்புசாமி, மூலக் கேள்வி ஒரு கிராமத்தைப் பற்றியது. நீங்கள் கேட்பது பற்றிய குறிப்பு அமைச்சரிடம் இருக்காது. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 318, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.